1974 சனவரி 28]

திரு. த. சோணேயா : தலைவரவர்களே, தியாகிகளுக்காக நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. அதைப் பெற்றுக்கொண்ட தியாகிகள் அந்த நிலத்தைக் குறைந்த விலையில் விற்றுவிடுகிருர்கள். ஆகவே, தியாகிகளுக்காகக் கொடுக்கப்பட்ட நிலத்தை அவர்களுடைய ஆயுள்பரியந்தம் விற்கக்கூடாது என்று தமிழக அரசு உத்தரவிட்டு, இதற்கு முன்பு விற்றிருந்தால் அப்படி வாங்கியது செல்லாது என்று அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தியாகிகளுக்குக் கொடுக்கப்பட்ட நிலம், நிலமற்றவர்களுக்கு என்ற முறையில் கொடுக்கப்படுகிறது. சில விதிமுறைகளை அனுசரித்துத்தான் கொடுக்கப்படுகிறது. சில நிபந்தனைகள் இருக்கின்றன. அந்த நிபந்தனைகளை மீறினுல் அரசு நடவடிக்கை எடுத்து மீண்டும் கைப்பற்றுவதற்கு அதிகாரம் உண்டு. ஆனுல் நிபந்தனைகளுக்குட்பட்டு அவர்கள் செயல்பட்டிருந்தால் நாம் ஒன்றும் செய்ய முடியாது.

கிராமங்களில் பொதுக் களங்கள்

* 203 வினு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) உணவு தானியங்கள், வைக்கோல் முதலியவைகளைக் காயப் போட கிராமங்களில் பொதுக்களம் அமைக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) and (இ) : கிராமங்களில் பொதுக்களம் அமைக்கும் திட்டம் அங்கீகரிக்கப்பட்டோ அல்லது பரிசீலனையிலோ கிடையாது. ஆனுல் ஊராட்சி ஒன்றியக் குழு தீர்மானம் நிறைவேற்றினுல் விவசாய மாணியத்தை உபயோகித்து ஒரு பொதுக்களம் கட்ட ஊராட்சி ஒன்றியங்களை அரசு அனுமதித்துள்ளது. மேலும் ஊராட்சிகள் ஆங்காங்கே இருக்கும் சட்ட உரிமையுடைய அல்லது ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களைக் கிராமத்தில் பொதுக்களம் கட்டத் தேவையானுல் அனுமதிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக பொதுக் களம் எங்கேயாவது கட்டப்பட்டிருக்கிறதா ? லால்குடி பகுதியில் பொதுக்களம் இல்லாமல் மக்கள் சிரமப்படுகிருர்கள். அதை அனுசரித்து அந்தப் பகுதியில் களம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் பல இடங்களில் பொதுக் களங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. லால்குடி பகுதியில் புறம்போக்கு நிலங்களே இல்லாத காரணத்தாலும், அங்கே நிலம் வைத்திருப்பவர்களே களங்களை அமைத்திருக்கின்ற காரணத்தாலும், தனித்தனியாக களங்கள் இருப்பதாலும் அங்கே பொதுக் களம் கட்டுவதற்கு யாரும் முன்வரவில்லை.

திரு. கு. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, இப்போது பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கின்ற ரூ. 3 ஆயிரம் போதவில்லை. ரூ. 3 ஆயிரம் செலவில் களம் அமைத்தால் விவசாயிகளுக்குப் போதுமானதாக இல்லாதிருப்பதால் ரூ. 10 ஆயிரம் செலவு செய்து அமைப்பதற்கான ஒரு முறை இருப்பதால் ரூ. 10 ஆயிரம் பஞ்சாயத்துக் களங்கள் அமைப்பதற்கு கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்த நடப்பு ஆண்டில் 22,066 களங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றில் 3-இல் இரண்டு பங்கு அரசாங்கமே ஏற்றுக்கொள்ள திட்டம் இருக்கிறது. இந்த ரூ. 10 ஆயிரம் திட்டம் இப்போது நடைமுறையில் இல்லை.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, தனி நபர்கள் களம் அமைக்க முன்வந்தால் பாதித் தொகையை மானியமாகத் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படி யோசனை ஒன்றுமில்லை.

திரு. கு. பெரியசாமி : சில கிராமங்களில் களம் கட்டுவதற்குப் புறம்போக்கு நிலங்கள் கிடையாது. நிலச்சுவான்தார்களிடமிருந்து களத்திற்குத் தேவையான நிலத்தை ஆர்ஜிதம் செய்து கிராம மக்களுக்கு உபயோகப் படுத்திக் கொள்வதற்கான திட்டம் அரசிடம் ஏதாவது இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நிலத்தை ஆர்ஜிதம் செய்து களம் அமைக்க முன் வந்தால் மூன்றில் இரண்டு பங்கு அரசு தரத் தயாராக இருக்கிறது.

கடலாடி ஒன்றியத்திலுள்ள ஆசிரியர்களது ஊதியம்

*204 வின.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :—

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி, திருப்புல்லாணி, பரமக்குடி, மண்டபம் ஆகிய ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கு 1973 ஆகஸ்டு மாதத்தில் இரண்டு மாதச் சம்பளம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்பது உண்மையா ?